நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.க.சிவகுமார்.,

மூ.மு.எண்.7366/2025/எப்1, **நாள் : 31.12.2025.**

பொருள் : மனை உட்பிரிவு – நாமக்கல் மாநகராட்சி – அக்ரஹார அய்யம்பாளையம் கிராமம் – சர்வே எண்.341/1C4-இல் உள்ள 0.55 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைக்கு உட்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – மனை உட்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(3)) துறை, நாள். 04.05.2017.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 90KBKI6J/ 54045/2025/TCP/ 2025/TCP , நாள். 27.11.2025.
3. திரு.D. தங்கவேல், த/பெ. துரைசாமி, 2) திரு. K. செந்தில்குமார், 41B, சுவாமி நகர், சேலம் ரோடு உபசந்து –4, நாமக்கல் ஆகியோரின் விண்ணப்பம், நாள். 10.12.2025.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு கடிதம், நாள். 22.12.2025.

*****

உத்தரவு:–

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட அக்ரஹார அய்யம்பாளையம் கிராமம் சர்வே எண்.341/1C4-இல் உள்ள 0.55 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள உத்தேச குடியிருப்பு மனைக்கு உட்பிரிவு அனுமதி கோரி தங்களால் நேரிடையாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதற்கு, பார்வை–2இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில், மனை உட்பிரிவிற்கு **SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.285/2025** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்படி மனை உட்பிரிவிற்கு பார்வை–1இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு, இம்மாநகராட்சிக்கு மனைப்பிரிவு கட்டணம் ரூ. 10,000/–, மனை உட்பிரிவு கட்டணம் ரூ. 7,000/–, வளர்ச்சி கட்டணம் ரூ. 7,000/– மற்றும் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ. 7,000/– ஆகியவை மாநகராட்சி கருவூலத்தில் சலான் எண். 051/01/1/25–26/0033917 இல் 31.12.2025 ஆம் தேதியன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை–1ல் கண்டுள்ள அரசாணையில் தொவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள், மனை உட்பிரிவு நிபந்தனைகள் மற்றும் பார்வை –2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி உட்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடும் செயல்முறைகள் வரைவு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

31/12/25

ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி.

31/12/25

பெறுநர்

1) திரு.D. தங்கவேல்,
த/பெ. துரைசாமி,
2) திரு. K. செந்தில்குமார்,
41B, சுவாமி நகர்,
சேலம் ரோடு உபசந்து –4,
நாமக்கல்.

நகல்.

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம்,
நாமக்கல் – அவர்களின் தகவலுக்கு.
2. நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர், நாமக்கல் மாநகராட்சி.
3. வருவாய் ஆய்வாளர், நாமக்கல் மாநகராட்சி – காலி மனைகளின் மீது வரி விதிப்பு செய்யும் பொருட்டு.